**IN THE COURT OF THE PRINCIPAL SUB JUDGE, KARUR**

| | |
|---|---|
| அசல் வழக்கு எண் | 393/2021 |
| நாள் | 04.04.2025 |
| வா.சா.1 | பழனிச்சாமி |
| வயது | 70 |
| ஊர் | கரூர் |

சாட்சி மீண்டும் நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக அனுமதி வழங்கப்பட்டது.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு வழககறிஞரின் குறுக்கு விசாரணை**

நான் அசல் வழக்கை என்னுடைய சொத்தை பாதுக்காக்க வேண்டி தாக்கல் செய்துள்ளேன். 1வது வாதி கிருஷ்ணமூாத்தி என்னுடைய கூட்டுபங்குதாரர் ஆவார். 3,4 வாதிகளும் என்னுடைய கூட்டுபங்குதாரர் ஆவார்கள். இவ்வழக்கை தாக்கல் செய்த சமயத்தில் எங்கள் சார்பாக 1வது வாதிதான் அசல் வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். நான் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாக கரூரில் தான் வசித்து வருகிறேன் என்றால் கருரிலும் வசிக்கிறேன். தும்பிவாடியில் விவசாய நிலம் இருப்பதால் அவ்வப்போது அங்கு சென்றும் வசிப்பேன். 1முதல் 4 வாதிகளாகிய நாங்கள் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் அல்ல என்றால சரிதான். தாவா சொத்தின் சர்வே எண் 381/1 ஆகும். பிரதிவாதிக்குண்டான சொத்து என் நிலத்திற்கு தென்மேற்கு மூலையில் அமைந்துள்ளது. தாவா சொத்தில் 1 முதல் 4 வரையிலான வாதிகளின் எனக்கு 2 ஏக்கர் 31 செண்ட், 1வது வாதி கிருஷ்ணமூர்த்தி என்பவருக்கு 2 ஏக்கர் 31 செண்ட், 3 மற்றும் 4 வாதிகளுக்கு சேர்த்து 2 ஏக்கர் 31 செண்ட் சொத்து பாத்தியப்பட்டதாகும். மேற்படியான விஸ்தீர்ணங்களை தனித்தனியாக எங்களுக்கு பாத்தயப்பட்டது என்பதனை காட்டுவதற்கு ஆவணங்கள் எதேனும் உள்ளதா என்றால் நான்ஆவணங்களை இவ்வழககில் தாக்கல் செய்துள்ளேன்.

1வது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தின் சர்வே எண் தற்போது எனக்க நியாபகமில்லை.

**(கற்றறிந்த பிரதிவாதி வழக்கறிஞரின் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.
ஒ/ம். திரு. வேடியப்பன்
முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.